பொதுப்பணித்துறை
19 OCT 2023
சேப்பாக்கம், சென்னை-5

| | |
|---|---|
| EIC (B) | |
| JCE (B) | |
| JCE (ELEC) | |
| DCE (B) | |

சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு கி.ஆசைத்தம்பி, த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு பி.கிருஷ்ணன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – விதிகளைத் தளர்த்தி பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (பணி II (1)) துறை

அரசாணை (3ப) எண். 18 | நாள் :16.10.2023
023677
சோபகிருது, புரட்டாசி 29
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை கடித எண். நி3(3)/36880/2018, நாள் 22.02.2022, 15.03.2022, 30.06.2022, 29.09.2022 மற்றும் 17.03.2023.

-----

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் அரசு ஊழியர் திரு. பி. கிருஷ்ணன் என்பவர் தருமபுரி மின் உபகோட்டத்தின் மின் கம்பியாளராக பணிபுரிந்து வந்த போது 17.12.1995 அன்று காலமாகியுள்ளார் என்றும் திரு. பி.கிருஷ்ணன் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் அதாவது 16.12.1998க்குள் கருணை அடிப்படையில் பணி வேண்டி அவரது மனைவி விண்ணப்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவரது இரண்டாவது மனைவி திருமதி. கி.சின்னக்குழந்தை (முதல் மனைவி இறந்துவிட்ட பின்னரே இவரை திருமணம் செய்துள்ளார்) அவர்கள் தன் மகன்

திரு. கி.ஆசைத்தம்பி அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 31.01.1996 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தனியருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட காலஞ்சென்ற அரசு ஊழியரின் முதல் மனைவியின் மகளான திருமதி.சந்திரா என்பவரும் இசைவளித்துள்ளார் என்றும் காலஞ்சென்ற திரு.பி.கிருஷ்ணன் என்பவரின் இரண்டாவது மனைவியான திருமதி. கி.சின்னக்குழந்தை அவர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் அவரது மகன் திரு.கி.ஆசைத்தம்பி என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டு, 05.04.2013 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக திருவண்ணாமலை, பொதுப்பணித் துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த இவர் தற்போது பணியிட மாறுதலில் திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தைச் சார்ந்த சென்னை, கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டத்தில் 09.11.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்து, தனியரின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 05.04.2013 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்களின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், அவரது கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு சென்னை-5, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தைச் சார்ந்த சென்னை-5, கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டத்தில் பணிபுரிந்து வரும் காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு பி.கிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.கி.ஆசைத்தம்பி என்பவரின் பணியினை, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில் அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 05.04.2013 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக, கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்த நாளில் தனியர் குறும வயது மற்றும் குறைந்தபட்ச கல்வி தகுதியை பெற்றிருக்கவில்லை என்பதால் தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020க்கு விலக்களிப்பதுடன், தமிழ்நாடு

அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b)) மற்றும் பணப்பலன்களை நியமன நாள் முதல் தனியருக்கு வழங்க இச்சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியவற்றை இச்சட்டத்தின் பிரிவு 58-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி ஆளுநர் அவர்கள் தளர்வு செய்கிறார்.

4. தனியரின் பணியினை வரன்முறை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை, அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணை மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண். 4701523/ஜி2/2023, நாள் 21.06.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன்.B
முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>:-

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித் துறை, சென்னை- 5.

திரு. கி. ஆசைத்தம்பி, இளநிலை உதவியாளர் (முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித் துறை, சென்னை வழியாக)

<u>நகல்</u>:-

மாநில கணக்காயர், சென்னை - 18.

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.

இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16.10.2023

பிரிவு அலுவலர்